பக்கங்கள்: ஆறு விலை: ரூபா 5-00 Registered as a Newspaper

பட்டுச் சேலைகளின் சோதி கலையாகத் கமழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

# உதயன்

கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

கடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 09 செவ்வாய்க்கிழமை (25-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 242

# 5 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேலும் யுத்த தளபாடங்கள்

## அரச படைக்குக் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 25

நவீன ரக விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள் ஆகியவற்றை 5 ஆயிரம் கோடி ரூபா செலவில் அரசு விரைவில் கொள்வனவு செய்யவிருக்கிறது.

ரஷ்யா, இஸ்ரேல், சீனா ஆகிய நாடுகளிடம் இருந்து இவை இறக்குமதி செய்யப்படவுள்ளன. இவற்றுள் "டோறா" படகுகளும், எம்.ஐ. 17 ரக விமானங்களும் இன்னும் இரு வார காலத்துக்குள் கொள்வனவு செய்யப்படவிருப்பதாகவும் —

இவற்றை கொள்வனவு செய்ய ஆயுத நிபுணர்கள் அந்த நாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் — கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

விமானங்களும் டாங்கிகளும் வந்தடைந்தவுடன் வடபகுதி மீது மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

## சீனாவிடமிருந்து அதிவேக கடற்படைக் கலங்கள்!

கடற்புலிகளின் அதிரடித் தாக்குதலில்பாரியகட்டளைக் கப்பலான "எடித்தாரவை" இழந்திருக்கும் கடற்படையினருக்கு சீனாவிலிருந்து — நீண்ட கடன் அடிப்படையில் — அதிவேக தாக்குதல் கடற்படைக்கலங்கள்கிடைக்கவிருக்கின்றன.

அடுத்து வரும் நாட்களில் இக்கலங்கள் ஸ்ரீலங்கா வந்து சேரும் என்றும் —

அவை வடக்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுத்தப்படும் என்றும் —

மேலும் பல தாக்குதல் கலங்கள் கடற்படைக்கு கிடைக்கவிருக்கின்றன என்றும் — "த சண்டே லீடர்" ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது. (உ)

## ஆயுதங்களுடன் கப்பல் முல்லைத்தீவுக்கு வந்ததாம்

கொழும்பு, ஜூலை 25

ஆயுதங்கள், வெடிமருந்துகள், ஏவுகணைகள் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு — வெளிநாட்டுக் கொடி பறக்க விட்டபடி — வந்த கப்பல் ஒன்றிலிருந்து முல்லைத்தீவுக் கரையோரத்தில் அப்பொருள்கள் இறக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் படகுகளில் ஏற்றப்பட்டதாக —

உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி "த சண்டே லீடர்" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட மர்மக்கப்பலுடன், கொழும்புத் துறைமுகத்தினூடாகச் செல்லும் மற்றொரு கப்பல் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை செய்த சமயம் இந்த விடயம் அம்பலத்துக்கு வந்ததாம்.

சம்பந்தப்பட்ட மர்மக் கப்பலின் கப்டன் தாமிகள் இந் (5 ஆம் பக்கம் பார்க்க)

## தளபதியாகும் வாய்ப்பை இழந்தார் தளுவத்த!

கொழும்பு, ஜூலை 25

"முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையில் படையினர் வெற்றியீட்டியிருந்தால் அதனை முன்னின்று நடத்திய மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்தவுக்கு இராணுவத் தளபதி பதவி கிடைத்திருக்கும் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

30 ஆயிரம் துருப்பினர் இன்றி இந் நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என்று மேஜர் ஜெனரல் செனவிரத்ன மறுப்புத் தெரிவித்த நிலையில் —

மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்த தாமாகவே முன்வந்து — சுமார் 10 ஆயிரம் துருப்புகளுடன் — முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையை முன்னின்று நடத்தினார்.

இந்த இராணுவ நடவடிக்கை வெற்றியீட்டியிருந்தால் அவருக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்பட்டிருக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

★ தலைநகரில் பாதுகாப்பு எப்படி?

## போலிக் குண்டுடன் சென்று தப்பி வந்த செய்தியாளர்!

கொழும்பு, ஜூலை 25

விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என அஞ்சப்படும் தலைநகர் கொழும்பில், பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெப்போதுமில்லாதவாறு பலவீனமாக இருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழான "த சண்டே லீடர்" ஆதாரங்களுடன் தெரிவித்து எச்சரிக்கை வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் (5 ஆம் பக்கம் பார்க்க)

## "பின்னோக்கிப் பாய்தல்" "சண்டே ரைம்ஸ்" கிண்டல்

கொழும்பு, ஜூலை 25

ஸ்ரீலங்கா அரசின் "ஒப்பரேஷன் லீப் போவேர்ட்" நடவடிக்கையின் நோக்கம் குறித்து விசனம் தெரிவித்து "இங்கிருந்து எங்கே?" என்ற தலைப்பில் "த சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழ் ஆசிரிய தலையங்கம் ஒன்றை வரைந்துள்ளது.

அதில் இடம்பெற்றுள்ள ஒரு சில பகுதிகள் வருமாறு:-

மிகவும் பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்ட — பிரபல்யமான — "ஒப்பரேஷன் லீப் போவேர்ட்" நடவடிக்கையின் நோக்கம் மற்றும் இலக்கு குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி, "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை அனேகமாக "பின்னோக்கிப் (5ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் சூழலில் தாக்குதல் நடக்காதாம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் உற்சவ காலத்தின் போது நல்லூர் பகுதி மீது ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்படமாட்டாது.

ஜனாதிபதி சந்திரிகாவை தாம் சந்தித்த போது ஜனாதிபதி இவ்வாறு உறுதியளித்ததாக பேராயர் அதி. வண எஸ். ஜெபநேசன் குறிப்பிட்டார். [உ-4]

## வாகரையில் பெரும் பஞ்சம்

கொழும்பு, ஜூலை 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்ல படையினர் தடை விதித்திருப்பதைத் தொடர்ந்து அங்கு பெரும் பட்டினி நிலை உருவாகியுள்ளது.

பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ள அப்பகுதி மக்கள் தாமரைக்கிழங்கு போன்றவற்றை உட்கொண்டு காலங்கழித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

வெளிநாட்டு நிபுணர்கள் தீட்டிய

## தாக்குதல் திட்ட ரகசியங்கள் புலிகளுக்கு கிடைத்துவிட்டனவாம்

கொழும்பு, ஜூலை 25

வடக்கில் படையினர் மேற்கொள்ளவிருந்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான பல முக்கிய ரகசியத் தகவல்கள் விடுதலைப் புலிகளின் கைக்குக் கிடைத்து விட்டன என்று மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ். குடாநாட்டையும், மற்றும் கிளிநொச்சிப் பகுதியையும் கைப்பற்றும் நோக்கில் தீட்டப்பட்ட — மூன்று கட்டங்களைக் கொண்ட — இராணுவ நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியிருந்த ரகசியத் தகவல்களே விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்து விட்டதாக அந்த அதிகாரியைமேற்கோள் காட்டி "லங்காதீப" பத்திரிகை தெரிவித்துள்ளது.

ரகசியத் தகவல்கள் விடுதலைப் புலிகளுக்குத் தெரிய (5 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அடுத்த மாதம் பாரிய தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் ஒகஸ்ட் 16 ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக "சண்டே லீடர்" ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

இந்த கொண்டாட்டங்களுடன் இணைந்த நாட்களில் யுத்த முனையிலும் வெற்றியீட்டுவதே அரசின் திட்டம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின் போது அரசாங்கம் 10 ஆயிரம் படையினரை யாழ்ப்பாணத்தில் ஈடுபடுத்தி இருந்தது.

ஒகஸ்ட் மாதம் இடம்பெற உள்ள பாரிய தாக்குதலின் போது மேலும் 12 ஆயிரம் படையினரைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் —

யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்காக ஒவ்வொன்றும் 90 படையினரைக் கொண்ட மூன்று பிளாட்டூன்களை ஆயத்தம் செய்யுமாறு ஒவ்வொரு படைப்பிரிவுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

துருப்புக்களை ஏற்றி இறக்குவதற்கு இது வரை பயன்படுத்தப்பட்டு வந்த "எடித்தரா" கட்டளைக் கப்பல் விடுதலைப் புலிகளினால் தகர்த்து (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மீதும் ஷெல்கள் விழுகின்றனவா? ஜனாதிபதி சந்திரிகா ஆச்சரியம்!

### பேராயர் ஜெபநேசன் சந்தித்த போது

"முன்னேறி பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் போது நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தது எனக்குத்தெரியவே தெரியாது. யாழ். நகரிலும் ஷெல்கள் வந்து விழுகின்றனவா?

— இவ்வாறு ஆச்சரியத்துடன் கேட்டாராம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கடந்த 19 ஆம் திகதிமாலை அலரி மாளிகையில் தம்மைச் சந்தித்ததென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயர் கலாநிதி அதி. வண. எஸ். ஜெபநேசனிடமே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேட்டாராம்.

சுமார் அரை மணி நேரம் இச்சந்திப்பு நீடித்தது.

இராணுவ நடவடிக்கையால் பொதுமக்கள் பெருமளவில் செத்து மடிகின்றனர்; ஷெல், விமானத் தாக்குதல்களால் உயிர், உடைமைச் சேதங்கள் பெருமளவில் ஏற்ப (5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சாவகச்சேரி
## அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்

அன்புடையீர்!

| | | |
|---|---|---|
| சித்திரத்தேர் | : 26-07-95 | புதன் பகல் 10 மணி |
| தீர்த்தத்திருவிழா | : 27-07-95 | வியாழன் காலை 9 மணி |
| பூங்காவனம் | : 28-07-95 | வெள்ளி பி. பகல் 3 மணி |
| ஆடிப்பூரத் திருவிளக்குப் பூஜை | : 31-07-95 | திங்கள் பிற்பகல் 3 மணி |

பத்து நாட்களும் விரதம் அநுட்டிப்பவர்களும், திருவிளக்குப் பூஜையில் பங்கு கொள்ளும் மாதரசிகள் தேவஸ்தானத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்தும் அம்பிகை அடியார்கள் இவ்விழா சிறப்புற நடைபெற பழவகைகள், எண்ணெய் அபிஷேகத் திரவியங்கள், பூமாலைகள், பொருள் உதவிகள் வழங்கி ஒத்துழைப்பு நல்கும்படி அன்புடன் கேட்கிறோம்.

★ அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக! ★

சுபம்.

இங்ஙனம்:
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா
(ஆலய தர்மகர்த்தா)

சித்திரத்தேர் சிறப்பாக நடைபெற அருள் வேண்டி!
**P. S.** பத்மநாதன் குடும்பம் (நோர்வே)
**R.** மகாஜெயம் குடும்பம் (டென்மார்க்)

தென்மட்டுவில் குறுமுனி அம்மன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

[37671]

## வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்
## விசேட பொதுக் கூட்டம்

சமீபத்தில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட சகல வங்கிகளின் ஓய்வூதியர்கள்/விதவைகள் சார்பில் எமது சங்கம் விரிவான ஓர் மகஜர் சமர்ப்பிக்கும் வண்ணம் ஓர் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை 27-07-95 அன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் (வர்த்தக வங்கிக்கு அருகில்) நடத்தப்படும்.

ஆகையால் குறிப்பிட்ட தினத்தில் சகல வங்கிகளின் ஓய்வூதியர்களையும் தவறாது சமூகமளிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ந. சோமசுந்தரம்
உதவிக் காரியதரிசி

24-07-1995. [37709]

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1954
உதிர்வு: 25 — 07 — 1983

### சிவசுப்பிரமணியம் சிவநாதன்
(T. S. K. V. Bros-களுத்துறை)

ஆண்டுகள் பல சென்றாலும் உன் பிரிவுத்துயர் எம்மை விட்டும் என்றும் அகலாது உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அம்மா, சகோதரங்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்

திருவேரகம்
வேலணை மேற்கு,
வேலணை—8

(37701)

## பேராதனை செல்லும் மாணவருக்கு

1994, 95 கல்வி ஆண்டுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற சகல பீட மாணவர்களில் இதுவரை தம்மைப் பதிவு செய்யாதவர்களை இன்று செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு தமது தொடர்பு எண்ணுடன் யாழ் இந்துக் கல்லூரியில் சமூகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. [ஐ]

## புலிகளின் குரல் வானொலியில்

**25 – 07 – 1995**
**செவ்வாய் இரவு**

★ 8-02 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
★ 8-20 — நலந்தாவா "அநாவசிய உயிரிழப்பிலிருந்து எம்மைக் காப்பது" பற்றி சில குறிப்புகள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய "வெளிப்பாடு"
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

**26 – 07 – 1995**
**புதன் காலை**

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

**செவ்வாய் மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — இவ்வாரம் இவர்
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து என் தெரிவு

# தெற்கில் சந்திரிகாவின் செல்வாக்கு சரிகிறது!

கொழும்பு, ஜூலை 25
தென்பகுதி மக்கள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஆதரவு சரியத் தொடங்கியுள்ளதாக கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து நடக்கும் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் நடுநிலையாகச் செயற்படுவது போலக் காட்டிக் கொண்டாலும் சிங்களவர்உட்பட நாட்டு மக்களில் பெரும்பாலானோர் பொ. ஐ முன்னணி அரசின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை மூலம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு மூலமே இத்தகவல் தெரிய வந்துள்ளது.

இதேவேளை —

கடந்த மார்ச் மாதம் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின்படி பொது மக்களில் 19 சதவீதத்தினரே சந்திரிகா அரசின் நடவடிக்கைகளால் அதிருப்தியடைந்திருந்தனர் என்றும் —

அந்த எண்ணிக்கை தற்போது 32 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ஐ-4)

## ஹெல்ற் ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
"ஹெல்ற்" ஆங்கில வகுப்புகள் சகல நிலையங்களிலும் மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. [ஐ]

## ஆலயங்களில்

தென்மராட்சி, ஜூலை 25
கிளாலி புனித யாகப்பர் தேவாலய நவநாள் உற்சவ தேர்ப் பவனி இன்று காலை இடம்பெறும்.

யாழ் மறை மாவட்ட ஆயர் அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் பத்துக் குருமார்களினால் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(ஐ-117)

## ஆரோக்கிய அன்னை திருநாள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
புலோலி சாரையடி ஆரோக்கிய அன்னை திருநாள் எதிர்வரும் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

29 ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு மரியன்னையின் திருச்சுரூப பவனியும் நற்கருணை விழாவும் மறுநாள் 30 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் இடம்பெறும். [ஐ]

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சகல அரச திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பவற்றில் பணிபுரியும் சகல தர உத்தியோகத்தர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை புதன் முற்பகல் 10 மணிக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகலரையும் அதில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
தென்மராட்சி கோட்டம்
## விசேட பொதுச்சபைக் கூட்டம்

இடம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்:- 28-07-95 வெள்ளி பி. ப. 4 மணி
விடயம்:-

(1) புதிய அனுமதிக்கான அட்டைகள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்
(2) பிறவிடயங்கள்

அன்று மாலை வகுப்புகளை நிறுத்தி அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

செயலாளர்,
தென்மராட்சிக் கோட்டம்.

(37707)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் ஐயாத்துரை பரமேஸ்வரி
(சங்கானை)

எனது அன்புக்குரியவரும் வித்யா நகையக உரிமையாளருமாகிய
**சக்திக்குமரனின்**
அன்புத்தாயாரின் மரணத்தையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் பங்கேற்று எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனுசா நகைமாடம்

173/4, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம் (37717)

## கண்ணீர் அஞ்சலி


அமரர்
### ஐயாத்துரை பரமேஸ்வரி [சங்கானை]

எமது நண்பனும் வித்தியா நகைக் கடை உரிமையாளருமாகிய சக்திகுமரனின் தாயாரின் மரணத்தையிட்டு துயருறும் சக்திகுமரனின் குடும்பத்திற்கும் விவேகானந்தனின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறி கருமாரி நகையகத்தினர்

இல. 175/2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (37716)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் கந்தையா கனகரத்தினம்
[உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி]

வையகத்தில் 23-03-1941
விண்ணகத்தில் 24-07-1988

ஆண்டு ஏழு சென்று விட்டாலும் - நீங்கள்
வாழ்ந்த இடத்தின் நினைவுகள் மறையவில்லை
மாண்பு மனிதப் பாண்பு - நீங்கள்
ஆண்ட இல்லம் அஞ்சலி செய்கின்றது.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மகன்

இல. 56, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (37712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கு பரவலான அதிகாரம் வழங்குவதே புதிய திட்டம்!

## வார இறுதியில் சந்திரிகா வெளியிடுவார்

கொழும்பு, ஜூலை 25

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் உத்தேச அரசியல் தீர்வு யோசனைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வார இறுதியில் நாட்டு மக்களுக்கு விசேட அறிவிப்பின் மூலம் வெளியிடவிருப்பதாக நேற்றைய அரசசார்புப் பத்திரிகைகளான 'தினகரன்', "டெயிலி நியூஸ்", செய்தி வெளியிட்டுள்ளன.

ஒற்றையாட்சியின் கீழ் மாகாணசபைகளுக்கு பரவலான அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே அந்த யோசனைகள் அமையலாம் என்றும்—

வார இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரையில் இந்த யோசனைகளை வெளியிடுவார் என்றும் — பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனைகள் அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களின் அபிப்பிராயத்துக்காக வெளியிடப்படுவதாகவும்—

பின்னர் அவை நடைமுறைக்கு வரும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த யோசனைகளை அமுல் படுத்தும் வகையில் ஒரு வாரத்தில் வடக்கு—கிழக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றையும் ஜனாதிபதி நியமிக்க இருப்பதாகவும்—

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக 15 பேர் இனவிகிதாசார அடிப்படையில் நியமிக்கப்படுவர் என்றும் —தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய சபைகளை அமைக்கும் வகையில் அரசியல் தீர்வுயோசனை அமையலாம். என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது (ஒ-3)

## கடத்தப்பட்டவர் குளத்தில் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 25

பேராதனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் குளம் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பேராதனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாகவும் —

பின்னர் தேடுதல் நடத்திய போது அவரது சடலம் குளம் ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகவும் — பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-3)

## புலிகளுக்கு பயந்து ஓடிய இன்ஸ்பெக்டர் நிறுத்தம்!

கொழும்பு, ஜூலை 25

தனுமடலாவே பொலிஸ் நிலையம் மீது கடந்த வாரம் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்ட போது அங்கிருந்து தப்பியோடிய பொலிஸ் இன்ஸ்பெக்டர். வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். தப்பியோடிய 26 பொலிஸாரும் வெலிமடைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்ட போது அந்தாக்குதலைப் பொலிஸார் எதிர்கொண்ட விதத்தை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும்—

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்றவில்லை எனவும் வடபிராந்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

## உச்சியோடை கிராமத்தில் ஷெல்லால் வீடுகள் சேதம்

மானிப்பாய், ஜூலை 25

மானிப்பாய் உச்சியோடை கிராமத்தில் உள்ள வீடுகள் பல ஷெல்வீச்சினால் சேதமடைந்துள்ளன

உச்சியோடைவீதி, இராசகாரியர்வீதி, சங்குவேலிவீதி, உடுவில்வீதி, மெமோறியல் வீதி, ஆஸ்பத்திரிவீதி ஆகியவற்றில் உடைந்த வீடுகளின் பகுதிகள் சிதறிக் காணப்படுகின்றன.

ஆஸ்பத்திரி வீதியில் வீடுகளும் அங்குள்ள காணிகளிலும் சேதமடைந்துள்ளன.

உச்சியோடை வீதியில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. ஒரு வீட்டு வளவில் ஷெல் ஒன்று வெடிக்காதுள்ளது.

கேலக்காமம் குளப்பகுதியிலும் அநேக ஷெல்கள் வெடிக்காமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிறீன் வைத்திய சாலையில் வீழ்ந்த ஷெல்லுக்கு இருவர் பலியானதும் எண்மர் காயமடைந்ததும் ஏற்கனவே தெரிந்தவையே.

[உ-90]


முப்பத்தொன்பது (39) ஆண்டுகள் ஆசிரிய உயர் பணியாற்றி

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில்

24 - 07 - 1995 உடன் தன் இனிய பணி முடிக்கும்

திருமதி பாக்கியம் கந்தையா - பண்டிதர் அவர்களை

வாழ்த்துகின்றோம்

வாய்மை, தூய்மை, ஒழுக்கம், கருணை இவையே கற்றல், கற்பித்தல் துறையின் நோக்காய்க் கொண்டு அவ்வண்ணமே வாழ்ந்து வழிகாட்டி முப்பத்தொன்பது (39) ஆண்டுகள் கல்விப் பணியாற்றி ஓய்வுபெறும்

எங்கள் அன்பு அன்னை ஆசிரியை

திருமதி பாக்கியம் கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர், திரு. சி.மு கந்தையா அவர்களின் துணைவியார், யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை) அவர்களை இதயம் நிறைத்து வாழ்த்துவதுடன், அவர் இன்னும் பல காலம் எம்முடன் வாழ்ந்து வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சேவை

1955 — 1956 யாழ். திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கற்றல் கற்பித்தலுக்கான பயிற்சியில்...

1957 — 1964 பண்டாரவளை ஸாஹிராக் கல்லூரியில் பணியின் திருவிளக்கைச் சிறப்புடன் ஏற்றி வைத்து உதவியாசிரியராக.

1964 — 1970 பண்டாரவளை சிறுமலர்க் கன்னியர் மடம் (Little Flower Convent) உயர்தர பாடசாலையில் தமிழ்ப்பிரிவின் தலைவியாக,

1979 — 1984 பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் பெண்கள் பகுதித் தலைவியாக

1984 — 1994 யாழ். சென் பெனடிற் றோ. க. பாடசாலையில் பகுதித் தலைவியாக,

1994 — 1995 யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் அன்புக்குப் பாத்திரமாய் விளங்கித் தம் நீண்ட ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.



அதிர்ந்திடும் இளமைப் பேறில்
ஆனநல்ல அறங்கள் செய்து
முதிர்ந்திடும் பருவந் தன்னில்
மக்களை முந்தி இருத்தி
அதிர்ந்திடும் துன்ப மேதும்
தந்திடா மக்கள்/பேரர்
வாழ்ந்திடல் கண்டு நெஞ்சு
மகிழ்வதே வாழ்வின் பேறு

வாழ்க நின் புகழ்! வளர்க நின் கருணை!

இன்று தன் இனிய ஆசிரிய பணி முடிக்கும் அன்னையை வாழ்த்துவது:

ARUNA ENTERPRISES (PVT.) LTD.
யைச் சேர்ந்த

திரு. திருமதி
ரகுபதி ரட்ணசோதி
குடும்பத்தினர்.

திரு. திருமதி
சிற்றம்பலம் உமேஸ்
குடும்பத்தினர்.

செல்வன் க. கிரிகரன் — மகன்
(பொறியியலாளர் Helaay's Ltd.)
செல்வி க. திவசஜினி — மகள்
உறவினர், நண்பர்கள்.

(37669)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, கிரான்வி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1687]

### மாணவர் பதிவு

பட்டயக் கணக்கறிஞர் நிறுவன தகுதிச் சான்றிதழ் 1996 ஜனவரி பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி 28-7-95 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய இலவச விரிவுரைகள் 1-8-95இல் ஆரம்பமாகும். உடன் தொடர்பு கொள்க; இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. [37702]

### தவறிவிட்டது

நான்கு சிறிய திறப்புக்களைக் கொண்ட திறப்புக் கோர்வை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 123/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [37695]

### காவேரி சீயாக்காய்

காவேரி சீயாக்காய் பவுடர் இப்பொழுது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். எம்முடைய தயாரிப்பான காவேரி சீயாக்காய் பவுடரில் 80 வீதம் சீயாக்காய் சேர்ப்பதால் சரசரப்பு தன்மையுடையதாக இருக்கும் என்பதை பாவனையாளருக்கு அறியத் தருகிறோம். (37687)

## சென். ஜேம்ஸ் வருடாந்த திருநாள்

குருநகரில் உள்ள சென். ஜேம்ஸ் தேவாலய வருடாந்த திருநாள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இன்று காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெறும்.

(ஒ-51)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியமலர் மாசிலாமணி

மலர்வு; 26—06—1936 உதிர்வு: 30—07—1989

திதி: 25 — 07 — 1995

தேவருலகில் வாழ்கின்ற—எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் - நாளும்
''பாக்கியமலர் காவுகின்றோம்.
பேசிச்சிரித்த முகம் பார்த்து - தாய்மைப்
பொட்டகத்துள் - தவழ்கின்றோம்
வீசிச்சிரிக்கும் பொன்காற்றில் - மாசில்
வீணையின் தவமாகின்றோம்
அம்மாவைப் பாடிடுவோம்-தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எம் தாயை என்றும் வணங்குவோம்
ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்புமறவாத;

கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
உறவினர்கள்.

''மணிமலர் இல்லம்''
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(37700)

## வில்லூன்றி தேவஸ்தானம்
### மை [பெயின்ற்] விற்பனைக்கு

வில்லூன்றி தேவஸ்தான இராசகோபுரத்திற்கு வர்ணம் தீட்டுவதற்கு வாங்கிய மை (பெயின்ற்) விற்பனைக்குண்டு. சைவாலயங்களுக்கு மட்டுமே விற்கப்படும். வாங்க விரும்பும் ஆலய நிர்வாகங்கள் வில்லூன்றி தேவஸ்தான தர்ம பரிபாலன சபைத் தலைவரைத் தொடர்பு கொள்ளவும்.

-தர்ம பரிபாலன சபை.

வில்லூன்றி.
23 - 07 - 95.

[37706]

உ

## வில்லூன்றி புனித தீர்த்தம்
## ஆடி அமாவாசை
### 27 - 07 - 1995 வியாழக்கிழமை

★ ஆடி அமாவாசையன்று வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும், பிதிர்த் தர்ப்பணம் செய்து கொள்ளவும் கடந்த வருடங்கள் போல இம்முறையும் வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலை 6மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளலாம்.

★ புனித தீர்த்தக் கேணிப் பாவனை, துப்புரவு வேலைகளுக்காக இன்றும், நாளையும் அனுமதிக்கப்படமாட்டாது. எனினும் அந்தியேட்டி மடங்களில் அந்தியேட்டிக் கிரியைகளை வழமை போல் செய்து கொள்ளலாம்.

★ பிதிர்த்தர்ப்பணம் செய்துவைக்கும் குருமார்களை 26 - 07 - 95 மத்தியானம் 12 மணிக்கு முன் தீர்த்தக்கேணி பணிமனையில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

– பரிபாலன சபை.

வில்லூன்றி.
24-07-1995.

(37705)

## நாய்களை காணவில்லை

$4\frac{1}{2}$ மாதம் நிரம்பிய இரு நாய்கள் 21 - 07 - 95 இரவு காணாமல் போய்விட்டன.

(1) Dobermann Pincher - ஆண்நாய் கறுப்பு கால்களில் மண்நிறம், வால் இல்லை.

(2) Dalmation - பெண் நாய் வெள்ளை உடம்பு முழுதும் சிவப்பு புள்ளிகள்


இவ் இரு நாய்களைப் பற்றி தகவல் தருவோருக்கு ரூபா 5,000/ சன்மானம் வழங்கப்படும்.

க. தனபாலசிங்கம்,
நல்லூர் வீடியோ சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை
முத்திரைச் சந்தையடி,
நல்லூர்.

[37703]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 — 09 — 1922



உதிர்வு: 15 — 08 — 1993

### அமரர் காசிப்பிள்ளை முத்தையா
[உரிமையாளர் கோமதிஸ் மன்னார்]

இறைவனோடு இணைந்து ஈராண்டு ஆயினும்
எம்மில் உறைந்திருக்கும் அன்பின் உருவமே!
வழி நடத்துவாயே இவ் வையத்தில்
இந் நாள் வரை எமை காத்து வந்தாயே
இனியும் எமை காப்பாயே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்.

24/3, சிவப்பிரகாசம் றோட்,
யாழ்ப்பாணம்.

(37698)

உ
தேவிமயம்

அல்வாய் - வேவிலந்தையம்பதி

அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

கும்பாபிஷேக மண்டல மஞ்சன பூர்த்தி தின
பஞ்ச குண்ட பக்ஷ நவோத்தர சகஸ்ர

# மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்

மஹா சங்காபிஷேக பூர்வாங்க கிரியைகள் யாவும் இன்று (25 - 07 - 1995) செவ்வாய்க்கிழமை மாலை 4-35 முதல் ஆரம்பமாகி நடைபெற்று நாளை புதன்கிழமை 10 மணி அளவில் மஹா சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

மஹா சங்காபிஷேக பிரதம குரு:
''வேதாகம மாமணி, சிவாகம கிரியா சூடாமணி
சிவஸ்ரீ பால. வைத்தியநாத சிவாச்சாரியார்
ஊரெழு

சுபம்:

[37696]

பரிபாலன சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2 நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## காசு நல்குவீர்!

விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்தி விடுதலையை வென்றெடுக்க நூறு கோடி ரூபா நிதி உடன் தேவைப்படுகிறது. வர்த்தகர்களும் பொதுமக்களும் தமது வரலாற்றுக் கடமையை உணர்ந்து, தாங்களாகவே முன்வந்து வாரி வழங்கி விடுதலையை விரைவுபடுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி, அதன் பின்னணி, இன்று அது எய்தியுள்ள நிலை என்பவற்றை அவர் மிக விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்தியம்பி உள்ளார்.

போர் என்றால் சண்டைகள் பல கொண்டது. சண்டைகளில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். ஆனால் பெரிய சண்டைகள் பலவற்றில் வென்றாலே போரில் இறுதி வெற்றி காண முடியும். இறுதி வெற்றி கிடைக்கும் போது தான் விடுதலை மலரும்.

ஆகையால், தமிழர்கள் தமது விடுதலையை அடைவதற்கு. இப்போதைய இராணுவ ரீதியாக மேலோங்கிய நிலையை நிரந்தரமாக்கி உறுதி செய்து கொள்ள வேண்டிய தேவை உண்டு.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்காக, தான் நடத்தும் போருக்காக ஸ்ரீலங்கா அரசு தனது சகல வளங்களையும் ஒன்று திரட்டிச் செயற்படுகிறது. அரசுக்குப் பக்கத் துணையாக சிங்கள மக்களின் பல மட்டத்தினரும் தாமாகவே பாதுகாப்பு நிதிக்கு அன்பளிப்புச் செய்து வருகிறார்கள்.

அந்த ஊக்குவிப்பில் அரசு போருக்காக மேன்மேலும் ஆயுதங்களை வாங்குகிறது. இதற்காக புதிதாக, மேலும் 5,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. படைகளுக்கும் புதிது புதிதாக ஆட்கள் திரட்டப்பட்டு வருகின்றனர்.

எனவே தமிழர் தரப்பு இவற்றுக்கு ஈடுகொடுத்து தொடர்ந்தும் போர்க்களத்தில் பலமான நிலையில் நிற்க வேண்டுமாயின், ஆளணி, நிதி வளம் மேலும் தேவை. இவை இல்லாவிடில் போரில் நின்று பிடிக்க முடியாது வீழ்ந்து போகும் ஆபத்து உண்டு.

இந்த ஆபத்து நெருங்காமல் தடுத்து நிறுத்தினால் தான், தமிழர்கள் விடுதலை குறித்துச் சிந்திக்க முடியும். எனவே இவ்வேளையில் போர்ச் செலவுக்கு நிதி உதவுவது ஒரு வரலாற்றுக் கடமையாகிறது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க சிங்கள மக்கள் தாமே முன்வந்து தாராளமாக பண உதவி செய்யும் போது—

தமிழர்கள் தமது விடுதலையை வென்றெடுக்க மனப்பூர்வமாகப் பண உதவி செய்வது அவர்களது முக்கிய கடமைகளில் ஒன்றாகும். கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் இலகுவில் வரும். நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் என்ற பாரதியின் பாடல் வரிகளை நினைவுபடுத்துங்கள்.

---

தமது நோக்கத்தை அம்பலப்படுத்திவிட்டதாம்

# பொதுசனத் தொடர்புப் பிரிவு மீது றொஹான் தளுவத்த சீற்றம்

கொழும்பு, ஜூலை 25

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது நடவடிக்கைகள் தலைமையகத்தின் பொதுசனத் தொடர்புப் பிரிவு நடந்து கொண்ட முறை, அந்நடவடிக்கைக்கு முழுப்பொறுப்பெடுத்துச் செயற்பட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்தயை சீற்றமடைய வைத்ததாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த இராணுவ நடவடிக்கை குறித்து — நடவடிக்கையின் முதல் நாளான ஜூலை 9 ஆம் திகதி— கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு தகவல் வெளியிடுவதற்காக கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் இராணுவ நடவடிக்கை பற்றிய வரைபடம் (Map) செய்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இராணுவத்தின் பொதுசனத் தொடர்புப் பிரிவினால் வெளியிடப்பட்ட இந்த வரைபடத்தில் படையினர் தமது முன்னணி நிலைகளிலிருந்து இரண்டு நிலைகளில் முன்னேறுவது பற்றிய தகவல் அம்புக்குறி மூலம் காட்டப்பட்டிருந்தது.

அந்த வரைப்படத்தைப் பார்க்கும் எவரும் அதில் உள்ள அம்புக்குறிகள் காட்டும் திசைகளை வைத்து. படையினரின் நடவடிக்கையின் நோக்கத்தை—இலக்கை — அப்பட்டமாகக் கண்டுபிடித்து விடக் கூடியதாக இருந்தது என்றும்—

இராணுவ நடவடிக்கையின் நோக்கம் பற்றிய இரகசியத்தை அம்பலப்படுத்தும் விதத்தில் அந்த வரைபடம் அமைந்தது கட்டளைத் தளபதி றொஹான் தளுவத்தவை சீற்றமுறச் செய்தது என்றும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம் —

இந்நடவடிக்கை குறித்து லண்டனிலிருந்து கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்களுக்கு விடுதலைப்புலிகள் அடுத்த நாள் அனுப்பிவைத்த செய்திக் குறிப்போடு இந்த வரைபடமும் இணைக்கப்பட்டிருந்தது அரசுத் தரப்பை அதிர்ச்சியடைய வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மரணம்

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் இடம்பெற்ற ''புக்காரா'' விமானக் குண்டு வீச்சில் சிக்கிப் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நவாலியைச் சேர்ந்த தம்பிநாயகம் விமலா (வயது 24) என்பவர் நேற்று மரணமானார்.

---

## போலிக்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிறிமாவோ பண்டாரநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் மற்றும் அரசின் முக்கிய உயர்மட்டத் தலைவர்களுக்கும் இந்த விடயம் பற்றி எச்சரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாப்பாட்டுப் பெட்டி ஒன்றுக்குள் பற்றறி, வயர்களுடன் இணைக்கப்பட்ட — போலி வெடிகுண்டு ஒன்றுடன் தமது செய்தியாளர்கள் இருவர் கொழும்பின் முக்கிய கேந்திர நிலையங்களுக்கு ஊடாக எந்தவித பிரச்சினையுமின்றி போய் வந்ததாகவும்—

அங்கிருந்த எந்தப் பாதுகாப்பு நிலையிலும் சோதனையின் போது சாப்பாட்டுப் பெட்டிக்குள் இருந்த பொருள்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் தலைமையகம், ஹல்ஸ்டோர்பில் உள்ள உயர் நீதிமன்றக் கட்டடத்தொகுதி இலங்கை வங்கி தலைமை அலுவலகம், வர்த்தக அமைச்சுக் கட்டடம் உட்பட பல்வேறு கேந்திர நிலையங்களுக்குள் தமது செய்தியாளர்கள் எவ்வாறு சென்றனர், அங்கு இடம்பெற்ற பாதுகாப்புச் சோதனைகள், அவற்றின் போது போலி வெடிகுண்டு கண்டுபிடிக்கப்படாமை. தலைநகர் கொழும்பில் உள்ள பலவீனமான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை பற்றி விரிவாக அப்பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரச கட்டடங்களுக்குள் போலி வெடி குண்டுகளுடன் நுழைந்து நடமாடிய சமயம், தாங்கள் பத்திரிகைச் செய்தியாளர்கள் என்று அந்த இருவரும் எந்தக் கட்டத்திலும் தம்மை அடையாளம் காட்டவில்லை என்றும் —

போலி வெடிகுண்டு அடங்கிய சாப்பாட்டுப் பெட்டியை தோள் பையில் போட்டவாறு பொலீஸ் தலைமையலுவலகத்துக்குள் நுழைந்து சாதாரண பொதுமக்கள் என்று தம்மை அறிமுகப்படுத்தி, பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. ரி. பேரின்பநாயகத்தின் அலுவலக அறைவரை சென்று அவரை அவர்கள் இருவரும் நேரில் சந்தித்து உரையாடி விட்டு வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பல கேந்திர நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த — குண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவி [''மெட்டல் டிடெக்டர்''] பழுதடைந்து காணப்பட்டதாகவும் —

சில இடங்களில் தோள் பையைச் சோதனையிட்ட சமயம், அக்கருவி சத்தம் எழுப்பியது என்றாலும், சாப்பாட்டுப் பெட்டியில் உணவு இருப்பதாகக் கூறியதும் அதனைச் சோதிக்காது காவலர்கள் விட்டுவிட்டதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ]

---

## தாக்குதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வந்திருப்பதை அடுத்து அந்த இராணுவ நடவடிக்கைத் திட்டம் முற்றிலுமாக மறுசீரமைக்கப் பட்டு வருவதாக அந்த மூத்த இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

வெளிநாட்டு இராணுவ நிபுணர்கள் மற்றும் யுத்தத்தை வழிநடத்தும் வல்லுநர்களின் ஆலோசனையின் அடிப்படையில் திட்டப்பட்டிருந்த அந்த இராணுவ நடவடிக்கைத் திட்டத்தின் இரகசியங்கள் எவ்வாறு விடுதலைப் புலிகளின் கைகளுக்குக் கிடைத்தன என்பது குறித்து தற்போது விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ''லங்காதீப'' தெரிவித்துள்ளது. [ஐ-10]

---

## ஆயுதங்களுடன்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தியா நோக்கிச்சென்றுகொண்டிருப்பதாகவும், இடையில் வழியைத் தவறவிட்டதாகவும் மேற்படி செய்திப் பரிவர்த்தனையின்போது குறிப்பிட்டாராம்.

ஆனால் அந்த மர்மக் கப்பலில் பறந்து கொண்டிருந்த கொடியை தங்களால் அடையாளம் காணமுடிந்ததாகவும் —

அக்கப்பலைச் சுற்றி பல படகுகள் காணப்பட்டதாகவும்—

மற்றைய கப்பலின் பணியாளர்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறக்கப்பட்ட ஆயுதங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு ஆயத்தமாக முல்லைத்தீவின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாக அப்பத்திரிகைச் செய்தியிலுள்ளது.

---

## யாழ். மீதும்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுகின்றன; மக்கள் சொல்லொணாத் துயரத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்— என இச்சந்திப்பின் போது பேராயர் தெரிவித்தார்.

யாழ் நகர் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து பதிலளித்த ஜனாதிபதி எப்படி அவ்வளவு தூரம் ஷெல்கள் வந்து விழும் என்று ஆயரிடம் கேட்டாராம்.

அதற்கு ஆயர் 8, 12, 18 மைல்கள் பாயக் கூடிய ஷெல்களை] உங்கள் துருப்புகள் வைத்திருக்கின்றன. இதனால் எங்கே, எப்போது, எவ்விடத்தில்ஷெல்கள்வீழ்ந்து வெடிக்கின்றன என்று அறிய முடியாது மக்கள் குலை நடுக்கத்தில் இருக்கிறார்கள் என்று பதிலளித்தாராம்.

''அத்தகைய ஷெல் தாக்குதல்களை நடத்தும்படி நான் ஒருபோதும் படையினருக்கு உத்தரவு வழங்கவில்லை. எதிரி முன்னோக்கி வரும்போது அவர்கள் வரும்திசையில்ஷெல்களை உபயோகிக்கலாம்என்று தான்கூறியுள்ளேன்''—என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி ''விபரேட்டட்'' என்ற பதத்தை உபயோகித்து, படையினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏன் மக்கள் வாழ விரும்புவதில்லை என்று குறும்புச் சிரிப்புடன் வினவினாராம். அப்போது ஜனாதிபதி யாழ் நிலைமையை மிகவும் துல்லியமாக அறிந்திருப்பதை தன்னால் உணரக் கூடியதாக இருந்ததாக ஆயர் சொன்னார்.

ஜனாதிபதி தற்போது தாம் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலைபற்றி ஆயரிடம் விரிவாக எடுத்துக் கூறியுள்ள போதும், போரை நிறுத்துவது சம்பந்தமாக எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இநநடவடிக்கையின் போது வட்டுக்கோட்டை பகுதியை ஆக்கிரமித்த படையினர் அங்கு தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராலயத்தில் தென்னிந்தியத் திருச்சபையின் முப்பது வருட யாழ். சரித்திரம் தொடர்பான இருபது லட்சம் ரூபா பெறுமதியான — நூல்களும் மற்றும் ஆவணங்களும் எரிந்தும் காணாமல் போயுமுள்ளதாக ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

அப்போது— ''புத்தகங்களை எரிப்பது எமது வழக்கமல்ல'' என்று ஜனாதிபதி பதிலளித்ததாகத் தெரியவந்தது. [உ-4]

---

## பின்னோக்கிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாய்தல்'' நடவடிக்கையாகி விட்டது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த 7ச சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றியதாக ஒரு நிலையில் அறிவித்த பாதுகாப்புப் படையினர், எங்கிருந்து நடவடிக்கைகளை ஆரம்பித்தார்களோ அந்த இடத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில்தான் இப்போது இருக்கிறார்கள்.

நிலைமையை விளக்குவதற்கு இராணுவத்தின் பொதுசனத் தொடர்பு சாதனப் பிரிவின்பிரசாரர்கள் விந்தையான சொல் வடிவத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

நூற்றுக்கணக்கில் பொதுமக்கள், படையினர், புரட்சியாளர்கள் கொல்லப்பட்ட நடவடிக்கையின் பின்னர் —

துருப்புக்கள் ''இடம்மாற்றி நிறுத்தப்படுவதாக'' [Relocated] அவர்கள் இப்போது கூறுகின்றார்கள்.

பின்னடைவுகளைச் சமாளிக்கும்போது ''பின்வாங்கும் தந்திரோபாயம்'' ''பின்வாங்கும் உத்தி'' என்று குறிப்பிடுவதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், ''இடம் மாற்றி நிறுத்துவது'' (Relocated) எதனைக் குறிக்கிறது?

ஜூலை 9 ஆம் திகதிய இராணுவ நடவடிக்கையின் நோக்கம் இராணுவத்தன்மையிலும் பார்க்க அரசியல் தன்மை உடையதே என இராணுவ வட்டாரங்கள் உட்பட அனேகமான சுயாதீன ஆய்வாளர்களும் பார்வையாளர்களும் கருதுகின்றனர்.

ஜூலை 15 இற்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று மக்களுக்கும் நாடாளுமன்றத்துக்கும் பயபக்தியோடு வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவதில் அரசுக்கு ஏற்பட்டுள்ள அவமானகரமான தோல்வியிலிருந்து மக்கள் கவனத்தைத் திருப்புவதே இந்நடவடிக்கையின் நோக்கம் எனப்பலர் கருதுகின்றார்கள்.

அப்படியானால் ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் — அல்லது இப்போது வேறு ஏதேனும் பெயரில் நாம் அழைத்தாலும் கூட அந்த நடவடிக்கையின்— நோக்கம் பெரும்பாலும் தனிப்பட்ட அல்லது கட்சியின் அரசியல் லாபம் கருதியதாகவே உள்ளது இதிலிருந்து யதார்த்தத்தில் நாம் எங்கு செல்லப் போகின்றோம்?

பொதுமக்கள் இறப்பு மற்றும் பாதிப்பு வீதத்தை அதிகரிக்கச் செய்த நவாலி தேவாலயம் மீதான குண்டு வீச்சு மற்றும் அது போன்ற சம்பவங்கள், வடக்கு தமிழ் மக்களின் மனதிலும் இருதயத்திலும் அரசு தோற்றுப்போகும் ஒரு நிலையை உருவாக்கிவிட்டன.

கடந்த வருடத் தேர்தல்களின்போது ஜனாதிபதி சந்திரிகா மீது தமிழ் மக்கள் காட்டிய நம்பிக்கையையும் உறுதியையும் மீண்டும் கட்டியெழுப்ப மாதங்களோ வருடங்களோ எடுக்கும்.

நடந்தவை நடந்து விட்டன.

இழந்த பிரதேசங்களை மீளக் கைப்பற்றுவதை விடுத்து, இழந்த இதயங்களையும் மனங்களையும் மீளக்கைப்பற்றும் அரசியல் காய் நகர்த்தல்களை முன்தள்ளி அதன் மூலம் நிலைமையைக் காப்பாற்றுவதே அரசுக்கு இன்று தேவைப்படுகின்றது.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவஞானம் சிவகுமாரன்

சிவஞானம் சிவகுமாரன் லண்டனில் காலமானார் இவர் காலம் சென்ற சிவஞானம். தங்கரத்தினம் அவர்களின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும், ஜெகப்பிரியன், குகப்பிரியன், பிரீத்தா, வாசுகி, திலோத்தமி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜ்குமார், சுதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவஞானம் தங்கரத்தினம்
[தாயார்)

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(37699)

## திருமதி நல்லம்மா பொன்னையா (சுப்பிரமணியம்)

23-07-95 ஞாயிறு காலமான திருமதி பொன்னையா (சுப்பிரமணியம்) நல்லம்மாவின் இறுதிக் கிரியை இன்று [25-07-95] செவ்வாய் காலை 10மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

P. துரைசிங்கம்
P. அழகரத்தினம் ) மகன்மார்
Lion V. P. தியாகராசா மருமகன்

லக்ஷ்மி,
மடத்தடி.
சாவகச்சேரி வடக்கு. (37710)

## திருமதி ஐயாத்துரை(செல்வம்) பரமேஸ்வரி

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை பரமேஸ்வரி 24-07-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பு ஐயாத்துரை (செல்வம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா, சக்திபவனம்- சோதிப்பிள்ளை [கனடா) ஆகியோரின் மூத்த புதல்வியும் சக்திகுகன் [லண்டன்], சக்திகுமரன் (வித்யாநகையகம்], சக்திசடாட்சரம் [ஜேர்மன்], புனிதரேகா, ரவிரேகா, சக்திச்சிவகிரிபரன் [பிரான்ஸ்], ஜனகரேகா [பிரான்ஸ்], சக்திக்குருபரன் (நோர்வே), மீனலோஜினி (லண்டன்], சக்திகுலதிலகன் (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புத்தாயாரும் விவேகானந்தன் (சங்கானை கல்விக்கோட்டம்), பஞ்சநாதன் (ஆசிரியர் சி ம.வி சங்கானை), ஜீவரஞ்சினி (லண்டன்], வனஜா, ராஜினி (ஜேர்மன்), சிவகுமார் (பிரான்ஸ்), சற்குணராஜா (லண்டன்], விஜிதா [பிரான்ஸ்] ஆகியோரின் மாமியாரும், வினோத், விஜித்,விஜய், விதுரா, வித்யா, குகவர்ணன், குகவத்சன், சாயினி, சாருஜன், தர்சிகா, தர்சன், ஜெனகன், யசிபன், விதுர்ஜன் நிதுர்ஜன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 25-07-95 முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல்சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. சக்திகுமரன்
(மகன்)

சங்கானை. (87715)

## மூத்ததம்பி பொன்னையா

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தற்பொழுது இல. 66/1, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான மூத்ததம்பி பொன்னையா அவர்கள் 24-07-1995 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், இராசரெத்தினம் [வர்த்தகர் – சுன்னாகம்] மகேஸ்வரி, சுப்பிரமணியம் [வர்த்தகர் – நெடுங்கேணி] காலஞ்சென்ற சின்னம்மா, வைரமுத்து {செயலாளர், நல்லூர் பிரதேச சபை], நாச்சிப்பிள்ளை, பதுமநாதன் [வர்த்தகர் – நெடுங்கேணி] ஆகியோரின் பாசமிகு தந்தையும், நல்லம்மா, சின்னத்துரை [இளைப்பாறிய ஆசிரியர்], மனோன்மணி, சுசிலாதேவி, காலஞ்சென்ற செல்வரெத்தினம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று [25.07.1995] செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பொ.வைரமுத்து
66/1,இந்து மகளிர்கல்லூரி ஒழுங்கை [மகன்)
யாழ்ப்பாணம். [37713]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-07-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அரசாங்கப் படைகளின் தோல்வி

# கொழும்பில் முற்றாக அம்பலம்

கொழும்பு, ஜூலை 25
ஸ்ரீலங்கா முப்படைகளும் இணைந்து கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்த ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை தோல்வியில் முடிவுற்றது பற்றிய தகவல்களை]''த சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் விவரமாக எழுதியிருக்கிறார்.

யாழ். குடாநாட்டின் விரிவான வரைபடத்துடன்—

★ ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கைக்கு முன்னர் அரசப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள்—

★ ''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின்போது அரசுப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ்வந்த 70 சதுர கிலோ மீற்றர் பிரதேசம்—

★ அவற்றிலிருந்து படையினர் பின்வாங்கிய பின்— அளவெட்டி, பெரியவிளான் பகுதியில் அரசப் படைகள் பிடித்து வைத்திருக்கும் இரண்டு கிலோ மீற்றர் பகுதி—

ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

''வானம் பாதுகாப்பானது —ஆனால் நடவடிக்கை பின் நோக்கிப் பாய்கிறது''— என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையில்—

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கை மூலம் அரசுப் படைகள் மிகக்குறைந்த அளவு பயனை அடைந்துள்ள போது, முக்கியமான இரண்டு நோக்கங்களை எய்துவதில் படைகள் தோல்வியடைந்து விட்டதாக அச்செய்தியாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

★ யாழ். குடாநாட்டு மக்களை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவே இந்நடவடிக்கை என முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த இலக்கு எட்டப்படவில்லை.

★ மறுபுறத்தில் பலாலி—காரைநகர் முகாம்களிடையே தரைவழிப் பாதை ஒன்றை ஏற்படுத்துவதுதான் இந்த நடவடிக்கையின் நோக்கமாக இருந்திருந்தால், அந்தப் பாதையையும் படைகளால் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை.

—இவ்வாறு அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (உ)

## ஜி. சி. ஈ. உயர்தர அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை. 25
ஜி. சி. ஈ உயர்தரப்பரீட்சையில் தோற்றவுள்ள சங்கானை தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பின்வரும் இடங்களில் வைத்து இன்று முதல் விநியோகிக்கப்படும்.

சங்கானை -கோட்டக்கல்வி அலுவலகம்.
சண்டிலிப்பாய் — மானிப்பாய் இந்துக் கல்லூரி.
தெல்லிப்பளை —மருதனார் மடம் மகாஜனக் கல்லூரி.
[ஐ]

## சுகாதாரப் பகுதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவை குறித்து அதில் மீளாய்வு செய்யப்படும்.
(ஐ-4)

## யாழ்ப்பாணத்தைக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் நாள் ஒன்றுக்கு ஏழாயிரம் அமெரிக்க டொலர் செலவில் புதிய கப்பல் ஒன்றை வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிடம் இருந்து வாடகைக்கு அமர்த்தி உள்ளது.

திருத்த முடியாத அளவுக்கு தாக்கப்பட்டுள்ள ''எடித்தரா'' கப்பலை படையினர் தற்போது கைவிட்டு விட்டனர்.

தற்போது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள புதிய கப்பல் ஒரே சமயத்தில் ஏழாயிரம் படையினரை ஏற்றி இறக்கக் கூடியது என்றும் —

மணித்தியாலம் 30 கடல் மைல் வேகத்தில் அது செல்லக் கூடியதாகையால் புலிகளின் தாக்குதலில் இருந்து அது தப்பிவிடக் கூடியதாக இருக்கும் என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி[illegible] இதே மேலும் தெரிவிக்கிறது.
(இ)

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு. அம்பாறை சிறப்புப் படையணியும், நிதர்சனமும் இணைந்து
வழங்கும்

சி. சேரனின்

### உறங்காத கண்மணிகள்

(முழுநீள திரைப்படம்)

திரைப்பட வெளியீட்டுப் பிரிவு,
நிதர்சனம், தமிழீழம்.
[சி-1917]

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா தில்லையம்பலம்

[ஆசிரியர் யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம வி]

குப்பிளானைச் சேர்ந்த செல்லப்பா தில்லையம்பலம் நேற்றுக் காலமானார்.

இவர் இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், சசிதரன் (ஆசிரியர், ஏழாலை ம. ம. வி), சசிகலா [கொழும்பு], சசிகுமார் (சுவிஸ்), சந்திரகுமார் [மாணவன், வசாவிளான் ம. ம. வி], சசிரேகா [மாணவி - யூனியன் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12-00 மணிக்கு குப்பிளான் காடாகடம்பை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. இரஞ்சிதமலர்
(மனைவி)

கலைவாவோடை,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை. [37718]

## செல்வி விமலா தம்பிநாயகம்

[Accounts Clerk, Mc. Leod Hospital - Inuvil]

நவாலியை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி விமலா தம்பிநாயகம் நேற்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற J. V. தம்பிநாயகம் [முன்னாள் அதிபர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி] - ஹரியற் [ஓய்வுபெற்ற ஆசிரியை] ஆகியோரின் இளைய மகளும், அரியசோதி [மருந்தாளர், Chest Clinic], ஏனெஸ்ட் அரியநாயகம் [பொறியியலாளர் - கொழும்பு], Dr. சாந்தி [வைத்தியர் - அமெரிக்கா], தவநாயகம் (Bank of Ceylon-Jaffna), அரியமணி [ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகேசபிள்ளை, கிருபா, ஏபிரகாம், இந்திரா ஆகியோரின் மைத்துனியும், றோகான், ஜிகான், ஜெனி, அரவிந்தன், அருந்ததி, ஏரன் ஆகியோரின் சிறிய தாயாரும், தாமரி, கிருஷான், டிலூஷா, சில்வியா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவரது நல்லடக்க ஆராதனை [25-7-95] இன்று பி.ப. 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சென். பீற்றர்ஸ் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். [37719]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org